30

# அவர்கள் சந்திப்பு

[ இந்தி நல்லெண்ண தூதுக்குழுவினர்
அண்ணாவை சந்தித்துப் பேசிய உரையாடல் ]

N51
59832

டப் பண்ணை

# அவர்கள் சந்திப்பு!

★

விலை ரூ. 0—3—0

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் :: திருச்சி.

# அவர்கள் சந்திப்பு!

ஒருநாள் இரவு மணி 7 இருக்கும். வீட்டிலே அண்ணாவுடன், பல விஷயங்கள் குறித்து, விவாதித்துக் கொண்டிருந்தோம். நாங்கள் எதிர்பாராத நிலையில் ஒருவர் 'நமஸ்காரம்' என்று கூறிக்கொண்டே வந்தார். அவரோடு வந்த உள்ளூர்க் காங்கிரஸ் பிரமுகர் ஒருவர், அவரை அறிமுகப்படுத்தி வைத்தார், 'இவர் இந்தி நல்லெண்ணத் தூதுக்குழுவின் அந்தரங்க காரியதரிசி' என்பதாக.

வந்தவர், 'எங்கள் தூதுக் குழுவின் சார்பில் வந்துள்ளேன். தங்களைச் சந்தித்துப் பேச நாங்கள் ஆவலோடு இருக்கிறோம். எப்போது தங்களைச் சந்திக்கலாம்' என்று கேட்டார்.

"மேற்படி தூதுக்குழுவினர், தென்னாட்டுக்கு வந்ததும் நம்மைச் சந்தித்திருக்கவேண்டும். அதுபடி செய்யத்தவறி விட்டார்கள். நம்மைப்பற்றித் தப்புக் கருத்துக்களைப் பரப்பும் காங்கிரஸ் மந்திரிகளைக் கண்டு விட்டு, பிறகு நம்மிடம் வந்து என்ன பிரயோஜனம்? நாம் எவ்வளவுதான் விளக்கினாலும் அவர்கள் நம்மைப் பற்றி அறிந்துகொள்வது கஷ்ட சாத்தியம். தப்புக் கண்களோடு நம்மைச் சந்திக்கும் அவர்களை நான் சந்திக்கப்போவதில்லை" என, 8—10—50 அன்று சென்னை—நுங்கம்பாக்கத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில், பகிரங்கமாக வெளியிட்டிருந்தார் அண்ணா. அதோடு, நாங்கள் இதுபற்றி அண்ணாவுடன் விவாதித்த போதும் அந்த முடிவுடனேயே இருப்பதாகவும், ஏதாவது அவர்களிடமிருந்து கடிதம் வந்தால் இந்தப் பதிலையே அனுப்பப் போவதாகவும் சொல்லியிருந்தார்.

ஆனல், தூதுக்குழுவினரோ கடிதம் எதுவும் அனுப்பவில்லை !

10–10–50 இரவு நேராகவே காஞ்சிக்கு வந்து, தங்கள் காரியதரிசியை அனுப்பியிருந்தனர்.

காரியதரிசி, 'எப்போது சந்திக்கலாம்? தயவுசெய்து தெரிவிக்கலாமா ?' என்று கேட்டார்.

இதைச் சிறிதும், எதிர்பார்க்கவில்லை, அண்ணு.

ஆகவே 11—10—50 காலை 9 மணிக்கு, இந்தி நல்லெண்ணத் தூதுக்குழுவினர் அண்ணுசந்திப்பு 'திராவிட நாடு' நிலையத்தில் நடைபெற்றது.

சரியாக 9 மணிக்கெல்லாம், இந்தித் தூதுக்குழுவினர் அலுவலகத்தில் வந்திறங்கினர். வந்தோரை, 'வருக' என, வரவேற்ருர் அண்ணு. அவர்களுக்கு முதலில் 'காப்பி' வழங்கப்பட்டது. பிறகு உரையாடல் துவங்கியது.

உரையாடல் முழுவதும் ஆங்கிலத்திலேயே நடைபெற்றது. வந்திருந்தோரில் அலாகாபாத் இந்தி சாகித்ய சம்மேளனத் தலைவர் சந்திரபள்ளி பாண்டே மட்டும் தனக்கு ஆங்கிலம் பயிற்சியில்லையென்று சொல்லி, தனது கேள்விகளை இந்தியிலேயே கேட்டார். அவைகளை பண்டிட் சீதாராம் சதுர்வேதி, ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொன்னர்.

தூதுக்குழுவினரில், குறிப்பிடக்கூடியவர், பண்டிட் சீதாராம் சதுர்வேதி தான். கேள்விகளைக் கேட்கும் போதும், அண்ணுவின் பதில்களைக் கேட்டபோதும், அவர் காட்டிய பொறுமையும் சிரத்தையும் போற்றத் தக்கதாயிருந்தன, விஷயத்தை அறிந்து கொள்ளும்

ஆர்வமும், ஆசையும் அவரிடம் காண முடிந்தது. உரையாடல் முடிந்து விடை பெற்றுக்கொள்ளும் போது அண்ணவை வடநாடு வந்து சுற்றுப் பயணம் செய்ய வேண்டும் என்று அன்போடு அவர் தான் முதலில் அழைத்தவர்.

உரையாடல், வெகு ரசமாகயிருந்ததோடு, கருத்துக்கு விருந்தாகவும் இருந்தது.

அண்ணு, நாட்டுப் பிரிவினைபற்றி குறிப்பிட்ட போதெல்லாம் ஐக்கிய மாகாண சட்டசபை உறுப்பினர் **பாபா ராகவதாஸ்** என்பவரும், காஞ்சனலதா **சபர்மாலா** என்ற தோழியரும் ஆத்திரமடைந்தனர் என்பதை, அவர்கள் கேட்ட கேள்விகள் காட்டின.

உரையாடலின்போது, இந்த இருவர்களிடமிருந்தும் காரசாரமான கேள்விகள் கிளம்பிக்கொண்டிருந்தும், அண்ணு, புன்சிரிப்போடேயே அவர்கட்குப் பதில்கள் தந்தார்.

கேள்விகளையும் பதில்களையும் நான் அருகிலிருந்தபடி, குறிப்பெடுத்துக் கொண்டிருந்தேன்.

உரையாடல், எதிர்பார்த்ததைவிட, பலன் தருவதாகயிருந்ததோடு அருமையான கருத்து விளக்கமும் கிடைத்தது.

ஆகவே, 'அந்த சந்திப்பு' நூல் வடிவில் வருவது, பெரிதும் பயன்தரும். பலர் நம்மைப்பற்றி அறிய வழி தரும் என்றே நம்புகிறேன்.

காஞ்சி.
20—12—50

அன்பன்,

**ஆ. ரங்கண்ணால்**

துணை ஆசிரியர் "திராவிட நாடு"

# தூதுக்குழுவினர்

சந்திரபள்ளி பாண்டே :—அலாகாபாத்-இந்தி சாகித்ய சம்மேளனத்தின் தலைவர்.

காஞ்சனலதா சபர்மாலா:—லக்னௌ-மகிளவித்யாலய பிரின்சிபாலாகப் பதவிவகிக்கும் பெண்மணி.

பாபா ராகவதாஸ் :—ஐக்கிய மாகாண சட்டசபை உறுப்பினர். இந்திய பாராளு மன்றத்திலும் உறுப்பின ராகயிருப்பவர்.

பண்டிட் சீதாராம் சதுர்வேதி :—காசி-இந்து பல்கலைக் கழகம்.

பால் சந்திரா ஆப்டே :—சென்னை—தியாகராய நகர் தட்சிண பாரத இந்திப்பிரச்சார சபையின் தலைமை ஆசிரியர்.

சந்திரகாந்த்:—தமிழ்நாட்டைச்சேர்ந்தவர், ஆயினும் வடநாடு சென்று, காசி ராணி கல்லூரி ஹாஸ்டலில் இருந்து வருகிறார். தூதுக்குழுவின் அந்தரங்கக் காரிய தரிசி, இவர்.

# உரையாடல்

சதுர்வேதி :—எங்கள் தூதுக் கோஷ்டி அரசியல் சார் பற்றது. சமாதானம் நட்பு ஆகியவைகளைப் பலப்படுத்தும் நோக்கத்துடனேயே வந்திருக்கிறோம். தாங்கள் இந்தி மொழி பரவுதல் கூடாது என எதிர்ப்பதாகக் கேள்விப்பட்டோம். இந்தி—ஆரியமொழி என்று தாங்கள் கூறுவதாகவும் அறிந்தோம். பல மொழிச்சேர்க்கையால் உருவான மொழியே இந்தியாகும். இதுவே பொது மொழியாக இருக்கும் நிலையிலிருப்பது என்று கருதுவதோடு, இந்திப் பொது மொழியாக இருக்க அருகதையுள்ளதென்று திடமாக நம்புகிறோம், ஆனால் தாங்கள், அது கூடாது என எதிர்ப்பதாகவும், அதற்கு முக்கிய காரணமாக 'இந்தி ஆரிய மொழி' என்று கூறுவதாகவும் கேள்விப்பட்டோம். ஆகவே இது பற்றிய தங்கள் கருத்துக்களை அறிய விரும்புகிறோம்.

சி. என். ஏ :—மகிழ்ச்சி. ஆனால், துரதிர்ஷ்ட வசமாக, யார் எங்களைப் பற்றி தப்பாகப் பிரச்சாரம் செய்கிறார்களோ அவர்களை நீங்கள் முதலில் சந்தித்திருக்கிறீர்கள்!

சதுர்வேதி :—இல்லை, இல்லை! அப்படி நினைக்காதீர்கள்.

சி. என். ஏ :—நாங்கள் அரசியல் காரணங்களுக்காகவே எதிர்ப்பதாகவும், பார்ப்பன துவேஷத்தால் எதிர்ப்பதாகவும் தங்களிடம் மாதவ மேனன் போன்றோர், தப்பாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்தி திணிக்கப் படவேண்டாம் என்று கூறுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. இந்தியா, சுதந்திரம் அடைவதற்கு முன்னரே, நாங்கள் இந்தியை எதிர்த்திருக்கிறோம். கட்டாய இந்தி கூடாது என்று கிளர்ச்சி செய்திருக்கிறோம்.

தேசிய மொழியாக இருக்கவேண்டும் என்று இந்தியைப் புகுத்துபவர்கள் காரணம் சொல்கிறார்கள். அதைக் காட்டியே இராஜகோபாலாச்சாரியார், இந்தியைக் கொண்டுவந்தார். அப்போது நாங்கள் எதிர்த்

தோம்—பலன் பெற்றோம். அதற்குள்ள காரணம், எங்கள் குழந்தைகள் தாய்மொழி தமிழ், அகில உலகமொழி ஆங்கிலம், இந்தி ஆகிய மூன்று மொழிகளைக் கற்க வேண்டிய கஷ்டத்திற்கு ஆளானார்கள்.

அதோடு, எங்கள் மொழி எல்லோரும் போற்றும் ஒரு சிறந்த மொழி. இலக்கிய வளமும், சிறந்த அழகும் வாய்ந்தது. இன்னொரு மொழி கட்டாயமாக எம்மீது திணிக்கப்பட்டால் தனிப்பெருமையுடைய எங்கள், தாய் மொழி தள்ளப்படும்.

இந்தி அழகுள்ளதல்ல, இலக்கிய வளங்கொண்டதல்ல என்று தங்கள் போன்றாரே ஒப்புக்கொண்டுள்ளீர்கள். ஆகவே, அத்தகைய ஒரு மொழி—எங்கள் மீது ஏன் சுமத்தப்படவேண்டும்?

எங்கள் எதிர்ப்புக்கு அரசியல் ரீதியிலும் ஆட்சேபங்கள் உண்டு.

இந்தி, அரசாங்க மொழியாகவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள், அதாவது இப்போது ஆங்கிலத்திற்கு இருக்கும் இடம் இந்திக்கு இருக்கவேண்டுமென்று கருதுகிறீர்கள். இதை, எங்களால் ஒப்பமுடியாது.

இந்தி தேவையென்றால், வேண்டுமென்பவர்கள் அதைக் கற்றுக்கொள்ள விரும்புவதில் எங்களுக்கு ஆட்சேபமில்லை. ஆனால் அது அரசாங்க மொழி என்று வலியுறுத்தப்படுவதில், வேறு அர்த்தம் தொனிக்கிறது.

இந்தியா, ஒரே நாடு என்ற எண்ணத்திலேயே இந்தி மொழி ஆதரவாளர்கள் அரசியல் மொழியாகவேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

**காஞ்சனலதா** :—அப்படியென்றால், இந்தியா ஒரு நாடில்லையா?

**சி. என். ஏ** :—இல்லை சகோதரி! இந்தியா ஒரு நாடல்ல—ஒரு உபகண்டம்!! பல இன மக்கள் வாழும்

ஒரு பரந்த நிலப்பரப்பு. இங்கே, ஒரே ஆட்சி நிலவுவ தென்பது முடியாது. அதேபோல, ஒரே மொழி, அரசாங்க மொழியாவதும் இயலாது.

இந்த இடத்தில் உங்களுக்கு ஒன்று கூற விரும்பு கின்றேன். வியாபார விஷயங்களுக்கோ அல்லது வேறு எந்தவித தொடர்புக்காகவோ, இந்தி வேண்டுமென்று கருதுபவர்கள் இந்தியைத் தெரிந்துகொள்வதில் எங்க ளுக்கு ஆட்சேபமில்லை.

ஆனால், அது அரசாங்க மொழியென்று கூறப்பட்டு இந்த உபகண்டத்திலுள்ள எல்லா மக்களும் கற்றுக் கொள்வது அவசியம் என்று வலியுறுத்தப்படுவதை நாங்கள் ஒப்ப முடியாது, இந்தியா ஒரு நாடல்ல.

இந்த விஷயத்தில், அடிப்படையிலேயே நமக்குள் கருத்து வேற்றுமை இருக்கிறது.

**சதுர்வேதி** :—அது பற்றி எங்கள் தெளிவுக்காக, விளக்க முடியுமா? தாங்கள், திராவிடஸ்தான் கோருவ தாகக் கேள்வியுற்றோம். அது சாத்தியமாகுமா? இந்தி யாவைக் கூறுபோட்டு இரண்டாக்கி பாக்கிஸ்தான் என்று ஒரு தனிநாட்டைச் சிருஷ்டித்ததால் எவ்வளவு கஷ்டங்களுக்கு ஆளாகியிருக்கிறோம்! எவ்வளவு இரத் தம் சிந்தப்பட்டிருக்கிறது! அகதிகள் பிரச்னை எவ்வளவு தொல்லையாக இருக்கிறது. பிரிவினையால், பொருளா தாரத் துறையில் நமது நாடு எவ்வளவு சங்கடப்படு கிறது. இதையெல்லாம் கவனிக்கும்போது, தனி நாடாகப் போவதிலுள்ள கஷ்டங்கள் விளங்கவில்லையா? இந்தியாவை, ஆர்யாவர்த்தம் என்றும், சீக்கிஸ்தான் என்றும் திராவிடஸ்தான் என்றும் பிரிப்பதால், இப் போது நாம் பாகிஸ்தானைப் பிரித்ததால் ஆளான கஷ்ட நஷ்டங்கள் உண்டாகாதா?

**சி. என். ஏ.** :—உண்மைதான். ஆனால் எங்கள்கோரிக் கை வேறு விதமானது; பாகிஸ்தான், சீக்கிஸ்தான் போன்றதல்ல! ஏனெனில்,

பாகிஸ்தான்—ஒரு புது சிருஷ்டி! சீக்கிஸ்தான்—ஒரு புதுக் கோரிக்கை! திராவிடஸ்தான்—தனியாகயிருந்த நாடு, தனியாக இருக்கும் நாடு!

**பாண்டே** :—அப்படியென்ருல்?

**சி. என். ஏ.** :—நாங்கள் கோரும் திராவிட நாடு பூகோள ரீதியிலும், சரித்திர ரீதியிலும் எப்போதும் தனியாகவேயிருந்ததாகும். வட இந்தியாவைப் போன்றதல்ல. பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் வடக்கேயிருந்திருக்கின்றன. சந்திரகுப்தன், அக்பர், அவுரங்கசீப் போன்ருருடைய சாம்ராஜ்யங்கள் வடக்கிலிருந்திருக்கின்றன! அப்போதும் நாங்கள் கூறும் திராவிடநாடு—தென்னுடு தனியாக, தனி அரசுடனேயே, இருந்ததாகும்

பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வந்து, இந்திய நாட்டைத் தங்கள் வசப்படுத்திய பின்னரே இந்தியா உருவாயிற்று நிர்வாக வசதிக்காக தென்னுடும் இணைக்கப்பட்டு டெல்லி ஆட்சி ஏற்பட்டது.

அதற்கு முன்னதாக தென்னுடு—தக்காணம்—ஒரு தனிச்சுதந்தர நாடாகத்தான் இருந்தது!

**சதுர்வேதி** :—தாங்கள் தனிநாடு கோருவதன் நோக்கம் என்ன?

**சி. என். ஏ.** :—எல்லா அதிகாரங்களும் எம்மிடமே இருக்கவேண்டும் என்பதுதான் இப்போது எதற்கெடுத்தாலும் டெல்லிக்குப் போக வேண்டியிருக்கிறது. அந்நிலையில்லாமல், எங்களது வர்த்தகத்தை நாங்களே நடத்த உரிமையிருக்கவேண்டும். இதுபோன்ற எங்களது விவகாரங்களில் இன்னெருத்தர் தலையீடு இருக்கக் கூடாது. எல்லாம் எங்களாலேயே கவனித்துக் கொள்ளப்படவேண்டும்.

**பாண்டே** :—பொருளாதார ரீதியில் அதுசாத்தியமா?

**சி. என். ஏ.** :—சாத்தியம்தான். எங்களை நாங்கள் ஆண்டுக்கொள்வதற்கான அத்துணை வசதிகளும் உள்ளன.

**சதுர்வேதி** :—அதாவது, திராவிடஸ்தான் பொருளாதார வசதி நிறைந்த தனி 'யூனிட்' என்று தெரிந்து கொண்டேன். அப்படித்தானே ?

**சி. என். ஏ** ;—ஆமாம் !

**சதுர்வேதி** :—அப்படியிருந்தாலும், இது பற்றிய எனது சொந்த அபிப்பிராயத்தைக் கூற விரும்புகிறேன். இரயில்வே, தபால் போக்குவரத்து போன்ற சில முக்கிய சாதனங்கள் பொதுவாகயிருப்பதுதானே நல்லது. நான் பிரயாகையில் புறப்பட்டு, கன்னியாகுமரிக்கு வருகிறேன். பொதுவாக, ஒரே நிர்வாகத்திலிருந்தால், நான் நேராக வரமுடியும். அப்படியில்லையென்றால், ஒவ்வொரு பிரதேசத்தில் நுழையும்போதும், இறங்கி 'பாஸ்போர்ட்' போன்றவைகளைக் காண்பித்துவிட்டு, செல்லவேண்டும். இதுபோன்ற கஷ்டங்கள் தபால் போக்குவரத்திலும் ஏற்படும். இது, ஒரே நிர்வாகத்திலிருந்தால் ஏற்படாதல்லவா ?

சி. என். ஏ. :—உண்மைதான் ! ஆனால், ஜெர்மனியிலிருந்து பிரான்ஸ், பிரான்சிலிருந்து இத்தாலி என்று செல்லும்போது, இறங்கி 'பாஸ்போர்ட்' காட்ட வேண்டியிருக்கிறதேயென்கிற கஷ்டத்திற்காக, ஐரோப்பிய மக்கள் எல்லாவற்றையும் ஒரே நிர்வாகத்தில் கொண்டுவரவேண்டும் என்று விரும்புகிறார்கள் ? பல நன்மைகளை நினைத்து தனிநாடு வேண்டுமெனக் கேட்டால் சில்லரைச் சங்கடங்களையேற்கத்தானேவேண்டும் !

காஞ்சனலதா :—ஒரே உலகம் ஏற்படவேண்டும், உலகிற்கே ஒரு பொதுப்பார்லிமெண்டு ஏற்படவேண்டும் என்றெல்லாம் பேசப்படுகிற இந்தக் காலத்தில் 'தனியாகப் போகிறேன்' என்று கூறலாமா ? ஒற்றுமையைக் குலைக்கலாமா ? ஒரு குடும்பத்தில் வசிக்கும் இரு சகோதரர்களல்லவா நாம் ?

சி. என். ஏ. :—தங்கள் உவமானம் தவறு எனக் கூற வருந்துகிறேன். நாம் ஒரே குடும்பத்தில் வசிக்கும்

சகோதரர்களல்ல! ஒரே வீட்டில் குடியிருக்கும் இரு நண்பர்கள்! அதிலும் அழகான தனி வீடு இருக்கும் போது கட்டாயப்படுத்தி ஒரே வீட்டில் வைக்கப்பட்டிருக்கும் நண்பர்கள்!

உலக ஐக்கியம் பற்றிக் கூறினீர்கள், நாங்கள் தனி நாடாகப் பிரிவதால், உலகத்தோடு துண்டித்துக்கொள்ள மாட்டோம். உலக வியவகாரங்களில் அக்கரை காட்டுவோம். வெளிநாட்டு விஷயங்களில், இந்தியா முழுமையுள்ள பிறருடைய கருத்து எப்படிச் செல்கிறதோ, அதோடு ஒன்றியே நாங்களும் இருப்போம்.

சதுர்வேதி :—அதாவது, வெளிநாட்டு விவகாரங்களில், பொதுவாகயிருந்து, இந்திய ஆட்சியினர் எடுக்கும் நடவடிக்கைகளோடு ஒத்துழைப்பீர்கள்,

காஞ்சனலதா :—அது எப்படி இயலும்?

சி. என். ஏ :—முடியும்! இப்போது உலக வியவகாரங்களைக் கவனித்துக்கொள்ள ஐக்கிய நாடுகள் சபையில்லையா. அதைப்போல இந்திய உபகண்ட முழுமைக்கும், நாம் ஒரு சபையை ஏற்படுத்திக்கொண்டு, வெளிநாட்டு வியவகாரங்கள் பற்றிய பொதுக் கொள்கையை நிர்ணயித்துக் கொள்ளலாம்.

காஞ்சனலதா :—வெளிநாட்டு விவகாரம் தவிர்த்து ஏனைய பொறுப்புகளும், அதிகாரங்களும் உங்கள் வசமே இருக்கவேண்டுமென விரும்புகிறீர்கள். இதை, மத்திய சர்க்காரிடம் தெரிவித்து உங்கள் அதிகாரங்களைப் பெருக்கிக்கொள்ளலாம்! உங்கள் மாகாணத்துக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமெனக் கோரி, அவைகள் இந்திய சர்க்காரால் மறுக்கப்பட்டால், பின்னர் ஏன் 'பிரிவினை' குறித்துப் பேசக்கூடாது? இப்போது இந்திய சர்க்காருடன் இணைந்திருப்பதால் எவ்வளவு நன்மைகள் இருக்கின்றன?

சி. என். ஏ :—நன்மைகள் எதுவும் இல்லை. தாங்கள் சொல்வதெல்லாம் நாங்கள் கேட்டு சலித்துப்போனவை.

**பாண்டே** :—ஆந்திரம், கேரளம். கர்னுடகம், தமிழகம் ஆகியவைகள் திராவிடஸ்தானில் அடங்கியிருக்கவேண்டும் என்று கூறுகிறீர்கள். அது எப்படி?

**சி. என். ஏ.** :—அந்தப்பிரதேசங்களில் வாழ்வோரெல்லாம் இனவாரியாகப் பார்த்தால் (Ethnically) திராவிடர்கள்.

**ஆப்டே** :—அப்படியென்ருல் மகாராஷ்டிரம்? அங்கும் திராவிடர்கள் இருக்கிருர்கள் - பஞ்ச - திராவிடர் என்று கூறப்படுகிருர்கள்.

**சி. என். ஏ.** :—ஆமாம்! அவர்களே, விரும்பினுல் தனிநாடு அமைத்துக்கொள்ள வேண்டியது தான்.

**காஞ்சனலதா** :—வங்காளம்?

**சி. என். ஏ.** :—அவர்கள் விரும்பினுல்!

**காஞ்சனலதா** :—இப்படியே பிரிந்து கொண்டே போனுல்......?

**சி. என். ஏ.** :—ஏன்? விதர்ப்பம்போன்று 42 ராஜ்யங்களிருந்திருக்கின்றனவே!

**ராகவதாஸ்** :—அது சரி. மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கப்பட வேண்டுமெனக் கூறப்படுகிறதே!

**சி. என். ஏ.** :—அது, நிர்வாகம் சுலபமாக யிருப்பதற்குத்தான். நாங்கள் கூறும் வகையில் அல்ல!

**ராகவதாஸ்** :—தங்கள் திராவிடஸ்தானில் ஆந்திரம், கேரளம், கர்னுடகம் ஆகியவைகளின் பொது மொழி என்ன?

**சி. என். ஏ.** :—ஆந்திரத்தில் தெலுங்கு, கர்னுடகத்தில் கன்னடம், கேரளத்தில் மலேயாளம் முறையே அவர்கள் சொந்த மொழியாக இருக்கும். கூட்டு ஆட்சி மொழியாகவும் சர்வதேச மொழியாகவும் (Federal and International) ஆங்கிலம் இருக்கலாம்.

**இராகவதாஸ்** :—ஆங்கிலம் படித்தவர்கள் எத்தனை பேர்?

சி. என். ஏ. :—10% அல்லது 12% இருக்கலாம்.

காஞ்சனலதா :—அதாவது, வட்டார மொழிகள் அறிந்தவர்களைவிட மிகக் குறைவு.

இராகவதாஸ் :—உதாரணமாக, நான் ஒரு சாதாரண பிரஜை. எனக்கு ஆங்கிலம் தெரியாது. அப்படியானால் உங்கள் பார்லிமெண்டில் எனக்கு இடம் கிடையாது.

சி. என். ஏ. :—மன்னிக்கவேண்டும். வட்டார மொழி களறிந்தவர்கள் சட்டசபை போகத் தடையில்லை. அந்தந்தப் பகுதியில் அந்த வட்டார மொழிதான் அரசி யல் மொழியாக இருக்கும்.

இராகவதாஸ் :—அப்படியானால் ஆங்கிலம்...?

சி. என். ஏ. :—அகில உலக தொடர்புக்கும், கூட் டாட்சி வியவகாரங்களுக்கும் அது பயன்படும் என்று குறிப்பிட்டேனே!

இராகவதாஸ் :—பொதுஜனமாகிய எனக்கு உலகம் வேண்டியதில்லை! நீங்கள் என்னைப் போன்றவருக்கும் சர்க்காருக்கும் இடையிலிருந்து மொழி பெயர்ப்பு வேலை செய்பவர்களாக ஆவீர்கள்!

சி. என். ஏ. :—ஒரு ஜனநாயக ஆட்சியில் பொது ஜனம் கட்டிப்பொருளல்ல — ஜனநாயகத்தின் உயிர் நோக்கமே அவர்களை முன்னேற்றுவதுதானே. ஆகவே, அறியாமை அதிக நாட்கள் நீடிக்கவேண்டுமா? பொது ஜனம் எப்பொழுதுமே பொதுஜனமாகவே இருக்க வேண்டும் என்பது தங்கள் விருப்பமா?

சதுர்வேதி :—பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் பிரச்னைபற்றிய தங்கள் கருத்தென்ன?

சி. என். ஏ. :—இங்குள்ள பார்ப்பனர் - பார்ப்பன ரல்லாதார் பிரச்னை வேறு. வடநாட்டிலுள்ள இந்து முஸ்லிம் விஷயம் வேறு. பார்ப்பனர் தங்களை உயர்ந்த வர்களெனக் கருதுகிறார்கள். சமுதாயத்தில் அவர்கள் செல்வாக்கு அதிகம். ஆகவே, அரசியலிலும், பொருளா தாரத்திலும் அவர்களுக்கே செல்வாக்கிருக்கிறது!

**சதுர்வேதி** :—இந்தப் பிரச்னை தீர வழியில்லையா ?

**சி. என். ஏ.** :—இன்னும் ஐந்து ஆண்டுகளில் தீர்ந்து விடலாம்.

**காஞ்ச** :—அதெப்படி, அவ்வளவு சரியாகச் சொல்கிறீர்கள் !

**சி. என். ஏ.** :—சகோதரி ! அது எங்கள் ஆசையைக் காட்டுகிறது. இப்போதே முக்கிய பார்ப்பனத் தலைவர்கள் இப்பிரச்னை முடிவு கட்டப்படவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

**ராகவதாஸ்** :—திராவிட நாட்டில் பார்ப்பனர்கள் நிலையென்ன ?

**சி. என். ஏ.** :—மனித உரிமையோடு வாழ்வார்கள் அவர்களை விரட்டுவதல்ல எங்கள் நோக்கம்

**பாண்டே** :—பார்ப்பனத் தலைவர்கள் இங்குள்ள இந்தப் பிரச்னையைத் தீர்க்க முயலவில்லையா ?

**சி. என். ஏ.** :—முயன்றிருந்தால் பிரச்னை வெகு சீக்கிரம் முடிந்திருக்கும். உதாரணத்துக்குச் சொல்கிறேன். இந்த 1950-ல் கூட, எங்களால், பார்ப்பனர் வசிக்கும் அக்கிரகாரத்தில் ஒரு வீடு வாங்கமுடியாது. அதுமட்டுமல்ல, கோயிலிருக்கிறது. அங்கு எங்களால் பூஜை முதலாய காரியங்களை 'அவர்கள்' மூலம் தான் செய்யவேண்டி யிருக்கிறது. எங்களால் செய்ய முடிவதில்லை ! அதேபோலத்தான், எங்கள் சடங்குகளும்.

**காஞ்சன** :—ஐரோப்பாவில் கூட மதக் குருமார் இருக்கத்தான் இருக்கிறார்கள் !

**சி. என். ஏ.** :—அங்கு யாரும் மதகுருவாக வரலாம். அதேபோல இங்கு நான் விரும்பினால், அப்துல் லதீப் ஆகிவிடலாம் ஆனால் அனந்தாச்சாரி ஆக முடியாது— எவ்வளவு வேத சாஸ்திரங்களைக் கற்றாலும், இங்கு நான் புரோகிதராக முடியாது !

**காஞ்சனலதா** :—உண்மைதான் — இதே நிலைதான் வடநாட்டிலும் இருக்கிறது.

சி. என். ஏ. :—நீங்கள் அதை உணரவில்லை.

ராகவதாஸ் :—தனிப்பட்ட பிராமணர்கள் இந்தவிஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொள்ளவில்லையா?

சி. என். ஏ. :—எடுத்துக் கொண்டார்கள். அது அவர்களுடனேயே நின்றுவிட்டது. உதாரணமாக ராஜகோபாலாச்சாரி போன்றவர்கள்—தங்களைப் பொறுத்தவரையில் சீர்திருத்தவாதிகள் தான். ஆனால் அவர்கள் சீர்திருத்தம் அவர்களுடனேயே நின்றுவிட்டது — தங்களைச் சேர்ந்தோரையும், தங்களைப்போல ஆக்கத் தவறிவிட்டார்கள்.

சதுர்வேதி :—மனிதாபிமானம் நிறைந்தோர் இக்கொடுமைகள் ஒழியவேண்டும் என்றே விரும்புவர். சமுதாய நீதி கிடைக்கவேண்டுமென்பதை யாரும் மறுக்க முடியாது. இதற்கு மகாத்மா காந்தியின் தத்துவமே போதுமே! பிரிவினையா கேட்கவேண்டும்.

சி. என். ஏ. :—காந்தியார், நல்ல தத்துவம் தந்தார். ஆனால் இங்குள்ளோர் தங்களுக்கேற்ற வகையில் அதைத் திரித்துக்கொண்டனரே!

காந்தியார் 'ராம் ராஜ்யமாக' நாடு இருக்கவேண்டும் என்று நல்ல நாடாக அமையவேண்டும் என்ற அர்த்தத்தில் சொன்னார் ஆனால் அதைப் பரப்பும் வசதி கொண்டவர்களோ, 'ராம் ராஜ்யம்' என்றால்—இந்து ராஜ்யம்—அதாவது வருணாசிரம தர்மம் இருக்கவேண்டும், நாலு சாதிகள் இருக்கவேண்டும் என்றல்லவா திரித்துப் பேசுகிறார்கள்!

சதுர்வேதி :—உண்மைதான்.

சி. என். ஏ. :—காந்தியார் தங்கத்தைத் தந்தார். ஆனால் அதை தங்கள் இஷ்டத்திற்கேற்றவாறு நகைகளாகச் செய்து கொண்டனர் — அவரது சகாக்கள். ஆனால் இங்குள்ளோரோ அதைக்கொண்டு விலங்கைச் செய்து எங்கள் கைகளில் பூட்டிடுகிறார்கள்!

சதுர்வேதி :—டெல்லியில் கூட 'மதராசிகள்' என்றால் வெறுப்பு இருக்கிறது. எல்லா உத்யோகங்களையும் அவர்களே பிடித்துக்கொண்டதாக அதிருப்தி உலவுகிறது, பிரிவினை ஏற்பட்டால் அவர்கள் பலாத்காரத்தோடு வெளியேற்றப்படலாமல்லவா ?

சி. என். ஏ. :—அதை நாங்கள் எதிர்பார்க்கிறோம்—நாட்டுப் பிரிவினை என்றால் இவைகளையெல்லாம் எதிர்பார்க்கத்தானே வேண்டும்

மேலும் தொடர்ந்து, பொதுச் செயலாளரிடம் கேள்விகள் கேட்டபோது, திராவிட நாட்டில் வெளிநாட்டாருக்குள்ள மனித உரிமைகள் குறித்து விளக்கினார். கடைசியில் பார்ப்பனர் — பார்ப்பனரல்லதார் பிரச்னை எவ்வளவு சீக்கிரம் முடிவடைகிறதோ அவ்வளவு விரைவில் பிரிவினைக் கிளர்ச்சி அதிகமாகும் என்றும் ஏனெனில் இப்போது இந்த வேற்றுமை ஒழிய வேண்டுமென்பதில் பார்ப்பனத் தலைவர்களும் சிரத்தை காட்டி வருவதாகவும், "அது வளர்ந்தால் 'இந்து' போன்ற பத்திரிகைகள் எங்கள் கோரிக்கையை விளக்கலாம். நாங்கள் பாகிஸ்தானுக்கு முன்பிருந்தே தனிநாடு கோருகிறோம். ஆனால் வடநாட்டிலிருக்கும் உங்களுக்கு, வேண்டிய அளவுக்கு, எங்கள் கோரிக்கை விளங்கியிருக்கவில்லை. காரணம், ஆங்கிலப் பத்திரிகைகள் அவர்கள் வசமிருப்பதால் எடுத்துச் சொல்லவில்லை" என்று விளக்கினார்.

கடைசியில் எல்லோரும் விடைபெற்றுக் கொள்ளுகையில், "தாங்கள், ஓய்வு கிடைக்கும்போது வடநாடு வரவேண்டும்" என்று அழைத்தனர். பொதுச் செயலாளர் தாம் முன்பே வந்திருப்பதாகவும், ஓய்வு கிடைக்கும் போது 'அவசியம்' வருவதாகவும் கூறினார்.

"நமது நட்பு வளரவேண்டும். நாங்கள் அரசியல்வாதிகள் அல்ல. சொந்த முறையில் கூறுகிறோம்" என்று, விடை பெற்றுக்கொண்டு சென்றனர்.

59832

திருச்சிராப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திருச்சி.

திராவிடப்பண்ணை

தெப்பக்குளம்
திருச்சி